
# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம் : இரண்டு | கணை : பதினான்கு | ஏப்ரல் – 2022





சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...

**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு.ஞா.இரத்தினசிங்கம்
திரு.ம.நிரேஸ்குமார்
திரு.க.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு.நா.அம்பிகைபாகன்
திரு.த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு.வே.நந்தகுமார்
திரு.பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி.நா.சந்திரிக்கா
திருமதி.ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி.வி.கந்தசாமி
திரு.ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு.கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**
guruseththiram@gmail.com

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| ஆசிரியரின் உள்ளத்திலிருந்து | 01 |
| காட்சியும் கருத்தும் | 03 |
| விளைதிறனுள்ள கற்போன் | 04 |
| “இன்பா”வின் சிந்தனைத் தொடர்கள் - 05 கதைகளால் நிஜமாகி... | 08 |
| வீரர்கள் வருவார்கள் விளையாட | 10 |
| சவாலுக்குட்படுமா 2023ஆம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தம் | 13 |
| இலங்கை ஒரு விவசாய நாடு...! | 15 |
| சோசலி‘ம் எதற்காக? (ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்) | 17 |
| தமிழ் மீது காதல் கொள்வோம் | 19 |
| கண்ணீர் அஞ்சலி | 20 |

(குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவர்கள்!)

# ஆசிரியரின் உள்ளத்திலிருந்து…

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே… என்னும் மகுட வாக்கியத்துடன் குருசேத்திரம் தனது வெற்றிகரமான மூன்றாவது ஆண்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பதில் மிக்க மகிழ்ச்சியடைவதுடன் ஒரு புதிய செயற்பாட்டாளரையும் குருசேத்திரம் குழுமம் தனதாக்கியுள்ளது.

மாதாந்த சஞ்சிகையாக உதித்த குருசேத்திரம் தனியாக சஞ்சிகையாக மாத்திரம் இல்லாமல் வாராந்தம் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அறிவுப் பகிர்வுத் தொடர்களையும் வெற்றிகரமாக நடத்தி வருகின்றது. குருசேத்திரத்தின் அறிவுப் பகிர்வுத் தொடர்கள் கடந்த மூன்று வாரங்களாக நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக நடைபெறவில்லை. சூழ்நிலைகளைக் காரணம் காட்டி குருசேத்திரம் தனது பணிகளை நிறுத்துவதை அல்லது தாமதப் படுத்துவதை நாம் எவருமே விரும்பவில்லை. மிக விரைவில் குருசேத்திரத்தின் அறிவுப் பகிர்வுத் தொடர்கள் புதிய, பிரமிக்கத்தக்க முறையில் ஆரம்பமாகவுள்ளன.

நாட்டில் நிகழுகின்ற அசாதாரண சூழ்நிலைகள் நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் நாளாந்த வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுள்ளன. எங்கேயோ எப்போதோ யாரோ ஒருவரால் அல்லது ஒரு சிலரால் இழைக்கப்பட்ட தவறுகள் இன்று நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் முதுகுகளில் கடன்களாக சுமத்தப்பட்டுள்ளன. வரலாறு காணாத அளவுக்குப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. பொருட்களுக்கான கேள்விகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் விலையேற்றத்தை மறக்கச் செய்கின்ற அல்லது மறைக்கின்ற பொருளாதார உத்திகள் கையாளப்படுகின்றன.

உதாரணமாக எரிபொருட்களின் விலை இரண்டு மடங்கிலும் பார்க்க அதிகரித்துள்ளன. அதே நேரம் எரிபொருட்களை வாங்குவதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறான காத்திருப்புக்களின் போது 1000 ரூபாவிற்கோ அல்லது 2000 ரூபாவிற்கோ எரிபொருள் கிடைத்தால் போதும் என்ற எண்ணம் சிந்தனைகளைச் சிறைப்பிடிக்குமே தவிர விலையேற்றம் தொடர்பான சிந்தனைகள் மேலெள மாட்டாது. ஆனால் இவ்வாறான உத்திகளைப் பயன்படுத்தி நீண்ட காலம் மக்களை ஏமாற்ற முடியாது. என்றோ ஒரு நாள் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கும் போது நாட்டில் புதிய சிந்தனைகள் மேலெழக் கூடும்.

விலைவாசி ஏற்றத்தினால் ஏற்பட்ட பொருளாதாரச் சுமைகள் ஒரு புறம் மக்களின் வாழ்க்கைச் செலவுகளைப் பன்மடங்காக அதிகரிக்க, நடைமுறைப்படுத்தப்படும் மின் துண்டிப்புக்கள் இன்னொரு பக்கம் பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன. மின் துண்டிப்பின் காரணமாக மாணவர்கள் தொடர்ச்சியாகக் கற்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தொழிநுட்பத்தின் வாயிலான வகுப்புக்கள் தடைப்படுகின்றன. க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, உயர் தரப் பரீட்சை மற்றும் புலமைப் பரிசில்

பரீட்சை என்பவற்றிற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். விளக்குகளைப் பயன்படுத்திப் படிப்பதற்கு மண்ணெய் தட்டுப்பாடு…

மறுபுறமாக மின்சாரத் துண்டிப்பின் காரணமாக உற்பத்திகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக உற்பத்தி வருமானங்கள் ஏற்றுமதி வருமானங்கள் என்பவற்றில் பாரிய வீழ்ச்சி ஏற்பட… பொருளாதாரம் மீண்டும் அதல பாதாளத்தை நோக்கிச் செல்கிறது. மீண்டும் மின் துண்டிப்புக்கு வழி செய்கின்றது. இவ்வாறான ஒரு வட்டச் செயன்முறையாக மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அரசாங்கத்தின் மீதும் அரச இயந்திரத்தின் மீதும் குறை கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை. மக்களாகிய நாங்கள் என்ன செய்ய வேண்டும்? பொருளாதார மீட்சிக்காக நாம் ஒவ்வொருவரும் என்ன பங்களிப்புச் செய்கின்றோம்? என்ற சுயமான சிந்தனைகள் எம்மிடையே மேலெழ வேண்டும்.

அவர் இப்படி வரும் என்று அப்போதே சொல்லிவிட்டார், இவரும் சொல்லிவிட்டார், என அரசியல் பிழைப்பு அறிக்கைகளை தவிர்த்து நாம் எமது சுய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்.

ஆம். இரண்டு வழிகளில் இழந்துள்ள பொருளாதாரத்தை மீட்பதில் நாங்கள் பங்களிப்புச் செய்யலாம்.

கிடைக்கின்ற வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தி அதியுச்சமான பயன்களைப் பெறுவது ஒரு வழி!

சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது இன்னொரு வழி!

முதலாவது விடயம் எம் எல்லோரினதும் மனங்களிலிருந்து செயல் வடிவம் பெற வேண்டும். இரண்டாவது… நாம் ஒவ்வொருவரும் எம்மால் ஆன உற்பத்திகளில் ஈடுபட வேண்டும். எமது நிலத்திற்கேற்ற, காலநிலைக்கேற்ற சிறிய சிறிய பயிர்களைப் பயிரிட வேண்டும். வீட்டுத் தோட்டங்களை அமைக்க வேண்டும். கால் நடைகளை வளர்க்க வேண்டும். தாவரங்களை வளர்க்க வேண்டும்.

மீண்டும் பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வரும். நாம் எல்லோரும் அதில் பங்குதாரர்களாக இருப்போம்.

மாற்றம் என்னிலிருந்து… மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்றி.

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர் / தலைவர்**
**குருசேத்திரம்.**

# காட்சியும் கருத்தும்

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.




இன்றைய பொருளாதார நிலைக்கு யார் காரணம்...

காரணமானவர்களை தேடுவதை விட காரணிகளைத் தேடுவது சிறப்பு...

இதில் என்னுடைய பங்களிப்பு என்ன?

ஆகக் குறைந்த ஒவ்வொருவருடைய பங்களிப்பும் சுய பொருளாதார மேம்பாட்டிற்கான சிறு சிறு முயற்சிகளையாவது அவரவர் குடும்ப மட்டத்திலிருந்து ஆரம்பித்தே...
எமது இருப்பை ஆரோக்கியமாக தக்கவைத்துக் கொள்வதற்கான முனைப்பாக அமையயும்.
முயற்சிப்போம்...



**படங்கள்: இணையம்**

# விளைதிறனுள்ள கற்போன்

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

பாடவிதானம் என்பது ஒரு பாடசாலையில் செயற்படுத்தப்படும் சகல கற்றல் அனுபவங்களும் எனக் கருதப்படுவதுடன் அதனை ஒழுங்குபடுத்தும் நிறுவனம் பாடசாலை எனவும் நடைமுறையில் உள்ளது. பாடவிதானம் என்னும் கற்றல் கற்பித்தல் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டே கல்விநிலையமொன்றின் அடிப்படை கட்டியெழுப்பப்படுகின்றது. கற்றல் செயன்முறை என்பது பெரும்பாலும் வகுப்பறையில் அல்லது பாடசாலைக்குள் அல்லது வெளியில் கற்போனின் ஆர்வமிக்க பங்குபற்றுதலோடு ஆசிரியரின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ கற்பவன் முன்னர் பெற்றிராத அறிவு, திறன், மனப்பாங்கு அல்லது பெறுமானம் (ஒன்றோ, பலவோ அல்லது எல்லாமோ) ஏற்படுத்திக்கொள்வதற்கு உதவும் அனுபவம் தொடர்பான செயன்முறையாகும், இங்கு அடிப்படையாக அமைவது கல்வி கற்பவனது ஈடுபாடும் பங்குபற்றுதலுமாகும்.

கற்பவனிடம் எதிர்பார்க்கும் அறிவு, திறன், மனப்பாங்கு, தேர்ச்சி , விழுமியம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒழுங்குபடுத்திய கற்றல் அனுபவங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான மானிட, பௌதீக, அடிப்படை வளங்களையும், காலத்தையும் (நேரம்), முறையாக ஒழுங்குற அமைந்த திட்டத்தின்படி உச்சப்பயன்பெறும் முறையில் செயற்படுத்தலும் அவற்றைப் பயன்படுத்தலும், பயன்படுத்தலின்போது குறித்த நோக்கங்கள் அடையப்பட்டதாவென அறிய மதிப்பீடுசெய்தலும் அச்செயன்முறையை தொடர்ச்சியாகச் செயற்படுத்துவதும் எனக் கருதப்படுகின்றது.

அதில் இரு அடிப்படைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

1. **விளைதிறன் - பயன்தருதன்மை (Effectiveness)**
   கல்விச்செயன்முறைமூலம் எதிர்பார்த்த நோக்கங்களை உச்ச அளவில் நிறைவேற்றிக்கொள்ளுவதனூடாக விளைதிறனை உச்சமட்டத்திற்கு கொண்டுவருதல்

### 2. வினைத்திறன் - பயன்படுதன்மை (Efficiency)

கல்விச்செயன்முறைமூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுவதற்காக **உள்ளிடும் வளங்களை** உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் அவற்றிலிருந்து உச்சப்பயனைப் பெறுதல்.
ஒரு விளைதிறனுள்ள ஆசிரியர் மெல்லக்கற்கும் மாணவர் விடயத்தில் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தி கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளது. ஒவ்வொரு மாணவரினதும் கற்றல் பாங்கும், புலக்காட்சியயும், அனுபவமாக்கல் பாங்கும் தனித்துவமானதென்பதை சரியாக இனங்காண்பதே ஆசிரியரினது பிரதான கடமையாகின்றது. விளைதிளன்மிக்க கற்றல் சூழமைவை உருவாக்கும் போது மாணவர்களிடத்தில் காணப்படும் ஒத்ததன்மைகளையும், தனித்துவங்களையும் இனங்காணுதல் அவசியமாகின்றது.

கல்வியலாளர்களின் தத்துவார்த்த மற்றும் ஆய்வச் சிந்தனைகளால் பெறப்பட்ட கலவித்தத்துவங்கள் இன்று ஆசிரியமையகல்வி முறையிலிருந்து மாணவர் மைய முறைமைக்கு கற்றலை இட்டுச் செல்கின்றது. அதாவது கற்றலுக்கு கற்போன பொறுப்பாக இருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. எனினும் விளைதிறனுள்ள கற்போனை உருவாக்கும் பொறுப்பு ஒரு ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது.

**விளைதிளனுள்ள கற்போனை உருவாக்கும் படிமுறைகள்:**

| | |
|---|---|
| 1. ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கு | ஒழுங்குபடுத்தப்பட்ட, படிமுறையான வேலை |
| 2. இலகுவானதை பெற்றுக்கொள்ளல் | சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் |
| 3. இலக்கிலிருந்து விலகாதிருத்தல் | மதிப்பீட்டின் அடிப்படையில் அடுத்த படிமுறையை திட்டமிடல் |
| 4. வேலையின் இடையே வினாவெழுப்புதல் வினாவெழுப்புதல் | உதவிதேவை என உணரும் போது |
| 5. மற்றவர்களின் கருத்துக்கள் மீது கருத்துருவாக்கம் | கேட்டல், பார்த்தல், வாசித்தல், செய்துபார்த்தல் |

மற்றவர்களுக்கு சொல்லுதல் மூலம் கருத்தாக்கம்

புதிய அறிகையுடன் முன்னையை அறிவை தொடர்புபடுத்தல்

மற்றவர்களுடன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளுதல்

கற்றுக்கொண்டவற்றிலிருந்து சுய ஊக்கலைப் பெற்றுக்கொள்ளல்

**விளைதிறனுள்ள கற்போனை உருவாக்குதலில் மாணவருக்கு உதவுதல் - மாதிரி 1**

1. குறிக்கப்பட் கற்றல் திறனின் மீது அவதானத்தைச் செலுத்துதல் (தகவல்களை ஒழுங்கு படுத்தல்)
2. குறிக்ப்பட்ட திறனை மாதிரியாகக் கொண்டு (Model) செயற்படல் (இலக்கைநோக்கிய செயற்பாடும் தீர்மானஙகளின் வெளிப்பாடும்)
3. சிறந்த அனுபவத்தை, தெளிவான இலக்கையும் வெளிக்கொணர்தல் (மாணவரிடம் தெளிவான எதிர்பார்ப்பை வெளிக்கொணருதல்)
4. கடினமான விடயங்களை கையாள்வதை நெறிப்படுத்தல் (இதுவரைசெய்தவறறினூடாக வழிப்படுத்தல்)
5. நேர்கையான பின்னூட்டலை வழங்குதல் - புள்ளிகளை அல்ல. (மாணவர்களின் செயற்பாடுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வதை ஊக்கப்படுத்தல்)
6. மாணவர்கள் சிறந்த கற்றல்பாங்கை பெறுவதை உறுதிப்படுத்தல்

**விளைதிறனுள்ள கற்போனை உருவாக்குதலில் மாணவருக்கு உதவுதல் - மாதிரி 2.**

பிரச்சினை அல்லது எழுவினா தொடர்பில் வகுப்பறையில் ஒத்துழைத்து செயற்படுவதற்கான சூழமைவை ஏற்படுத்தி படிப்படியாக ஆசிரியரின் உதவியை விலக்கிக்கொள்ளுதல்

சவாலான கற்றல் பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்ளுதல்

அமைப்பாக்கப்பட்ட சோடிகளாக அல்லது சிறிய குழுவாக வேலைப்பகிர்வை வழங்குதல்

மாணவர் தாம் பயன்படுத்தும் கற்றல் நுட்பங்களை பிரதிபலித்தல் செயல்முறையில் ஈடுபட ஊக்கப்படுத்தல்.

கற்றல் பிரச்சினை மீதான கவனத்தையும், தீட்வுக்கான திட்டத்தின் மீதும் கவனத்தை குவியப்படுத்தல்

மாணவர் தாம் பெற்ற கற்றல் அனுபவங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளவும், மற்றவர்களனி அனுபவங்கள் பற்றிய கருத்துக்களை கூறவும், மதிப்பிடவும் சந்தர்பம் வழங்குதலும் ஊக்குவித்தலும்.

கல்வி அறிஞர்களினால் மன்வைக்கப்பட்டுவரும் சீர்திருத்தங்களும் முன்மொழிவுகளும் ஆசிரியர் மையக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் இருந்து மாணவர்மைய செயற்பாடகளாக மாற்றம் பெற்றுவருகின்றது. அதற்கேற்றவகையில் கற்றல் கற்பித்தல் முறைகளும், கற்றல் வளங்களும், மதிப்பீட்டு முறைகளும் மாற்றமடைந்து வருகின்றது. அந்த வகையில் விளைதிறனுள்ள கற்போனை உருவாக்குவதில் ஆசிரியரின் பங்கு இன்னியமையாதது.

## “இன்பா”வின் சிந்தனைத் தொடர் - (05)
## கதைகளால் நியமாகி....

### காட்டு மரத்தை சாய்த்த வண்டுகள்



வகுப்பில் ஒரு மாணவன் இருந்தான். ஜாலி என்ற பேரில் உலகில் உள்ள அத்தனை கெட்ட பழக்கங்களையும் கற்று வைத்திருந்தான். அவனது கெட்ட பழக்கங்களை யாராவது சுட்டிக் காட்டினால் அவன் சொல்லும் பதில் இதுதான் “இந்த வயதில்தான இப்படி எல்லாம் இருக்க முடியும் அப்புறம் மாறிவிடலாம்” இவனுடைய இந்தப் பழக்கங்களைக் கவனித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் அவரை அழைத்தார். தம்பி நான் சொல்லும் இந்தக் கதையைக் கேள் உன்தவறு உனக்குப் புரியும்.

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு ராட்சதக் காட்டுமரம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் இருந்தது. அதன் பெயர் “சிக்காயோ” கலிலீ கடற்கரை ஓரத்தில் இயேசு நடைப்பயணம் மேற்க்கொண்டபோது அது ஒரு சிறிய மரக்கன்றாக இருந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த சமயத்தில் அது நன்கு வளர்ச்சி அடைந்து அதன்பிறகு அமெரிக்க உள்நாட்டுப் போர் நடைபெற்ற சமயத்தில் அது விஸ்வரூபம் எடுத்து வியாபித்து நின்றது. எந்த சூறாவளிக்காற்றும் எந்த வெள்ளப்பெருக்கும் எந்த காட்டுத் தீயும் எந்த வறட்சியும் அந்த மரத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. அது மென்மெலும் வளர்ந்து பல நூற்றாண்டுகள் பசுமையாக நிற்கும் என்றுதான் அனுமானிக்கப்பட்டது. அதன் பிறகுதான் அதற்கு சிக்கல் ஏற்ப்படத் தொடங்கியது.



சில வருடங்ககளுக்கு முன்பு ஒரு சிறு வண்டு அந்த மரத்தின் பட்டையில் ஒரு சிறு பொந்தினை உருவாக்கி வசிக்கத்தொடங்கியது. பிறகு அந்த வண்டு அந்தப் பொந்தில் முட்டைகளை இட்டது. அந்த



முட்டைகள் மூலம் மேலும் சில வண்டுகள் பிறந்தன. அந்த ராட்ச்சத மரத்தை பார்க்கும் இந்த சிறிய வண்டுகள் எம்மாத்திரம்? ஆனால் அந்த சிறு வண்டுகள் நூற்றுக் கணக்கில் பெருகின. பிறகு ஆயிரக்கணக்கில் மாறி இறுதியில் மில்லியன் கணக்கான வண்டுகள் அந்த மரத்தில் உருவாகின. தொடக்கத்தில் அந்த மரத்தின் பட்டைகளை அவை தாக்கத்தொடங்கின. அதன் பின்னர் மெல்ல மெல்ல முன்னேறி அடிமரத்துக்குள் கொஞ்சம் கொஞ்சமாக ஊடுருவ தொடங்கின. இறுதியாக அந்த பிரமாண்டமான காட்டு மரம் முழுவதையும் ஊடுருவி அதன் வலிமையை முற்றிலும் குறைத்துவிட்டன.



எத்தனையோ நூற்றாணடுகளாக எத்தனையோ இயற்கைச் சீற்றங்களைச் சமாளித்த அந்தக் காட்டு மரம் ஒரு நாள் திடீரென அடித்த ஒரு புயல்காற்றில் அடியோடு சாய்ந்து விட்டது. அது சாய்ந்ததிற்கு புயல் காற்று காரணம் அல்ல அந்த சிறிய வண்டுகள் கொஞ்சம் கொஞ்சமாக அதனைப் பலவீனப்படுத்தியதால் தான் அது விழுந்தது.

கெட்டபழக்கங்களும் இப்படித்தான் மக்களின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றன. அவை மனிதனின் உடலில் கொஞ்சம் கொஞ்சமாக ஊடுருவி ஒரு குறிப்பிட்ட நாள் வரும் போது அந்த மரம் சாய்ந்ததைப் போல அவனைச் சாய்த்துவிடுகிறது.

தம்பி உன்னிடம் இருக்கும் கெட்ட பழக்கங்களும் அப்படித்தான் “கெட்ட பழக்கத்தை தொடக்கத்திலேயே துரத்திவிடவேண்டும்.” ஆசிரியரின் விளக்கம் மாணவனுக்குப் புரிந்தது.

**நீதி : நல்ல பழக்கங்களுடன் வாழ்வது இலகு.**

**அடுத்த இதழில் தொடரும்...**

# வீரர்கள் வருவார்கள் விளையாட

1

சிவ.இராஜேந்திரன்

“என்னா தாத்தா காலையில் இருந்து ஒரே யோசனையா… இருக்கிறீங்க… அப்பத்தாவுட்டு ஞாபகம் வந்திருச்சோ…” மேல் ரோட்டில் இருந்தவாறே பிரசாத் கேட்டான். அவனோடு ஐந்து மேட்டு லயத்துப் பொடியன்களும் நின்றுக் கொண்டிருந்தனர்.

“ஆமாம்.. அப்பத்தா… கிரவுண்டுக்கு வந்து நடுவுல நின்னு ஒலிபோல் வெளயாடுறாக நான் பார்த்துக்கிட்டு இருக்கிறேன்.. போங்க… நீங்க எல்லாம் எங்க உருப்பட போறீங்க… போனுங் கையுமா திரிகிறீக… ஒங்க ஒடம்ப பாரு… கரண்டு கோழி மாதிரி… நோய் புடிச்சிப் போய் இருக்கு… எழும்பி நடக்கவே சாகுறானுங்க… வெளையாட்டெல்லாம் ஒங்களுக்கு சரி வருமா?… இந்த கிரவுண்டு வந்த வரலாறு தெரியுமா? நாங்க பட்ட கஸ்டம் தெரியுமா?” மாணிக்கம் தாத்தாவின் குரலில் கோபம் வெளிப்பட்டது.

“கிரவுண்டு தான் காடு மாதிரி கெடக்குதே தாத்தா…. இதுல எங்க வெளையாடுறது… மாடுக கூட பில்லு மேய வரமாட்டேன்கிது” எல்லோரும் சிரித்தார்கள்.

“அது சரி மாடுகளுக்குத் தெரியும் எங்க போவனும் எங்க போவக் கூடாதுன்னு… நம்ம ஆளுகளுக்குத் தான் அது கூட தெரியாதே இங்க வாங்க.. இன்னக்கி இந்த கிரவுண்டு வுட்டு கதய சொல்லுறேன்… அப்ப தான் ஏம்புட்டு உசிரு சந்தோசமா போகும்” ஒருவன் மட்டும் ஓடிப்போய் விட்டான். நான்கு பேரும் அருகில் வந்து அமர்ந்தார்கள். தாத்தா மீது அன்பு காட்டும் “பயலுகளில்” இவர்களும் முக்கியமானவர்கள்.

“நீ மேட்டு லயத்துலவுள்ள… ரெங்கசாமிவுட்டு மகேன்.. நீ வந்து…. ராமையா கங்காணி மகேன்… சரி… இந்த பொடியன்…. நீ கொழும்புல வேல செய்யிற ராஜேந்திரன் வுட்டு மகேன்… இவரு யாரு…”

“எப்புடி தாத்தா பெயரையெல்லாம் சரியா சொல்லுறீங்க… எனக்கே இவுங்கவுட்டு அப்பாமாரு பேருகளை எனக்கே சரியா தெரியாது… இந்த பொடியன்… வெளிநாட்டுக்குப் போன ரஜனி அவுங்கவுட்டு மகேன் தாத்தா… பேரு ரஞ்சன் ரெங்கசாமியின் மகன் பிரியன்.” அனைத்து பொடியன்களையும் தனது உறவாக கருதி அன்பு காட்டும் தாத்தாவுக்கு தனி மதிப்பு இருந்தது.

“ஓ.. சரி சரி… இவுங்க அப்பாதான்.. வருத்தத்துல எறந்து போயிட்டாரே.. வாப்பா இங்க கிட்ட வந்து ஒக்காரு” அவனது தலையை தடவினார் தாத்தா. தாத்தாவின் அன்பில் கிரங்கிப்போனான் ரஞ்சன்.

“இந்தா புடிங்க இதுல நூறு ரூவா இருக்கு... பாலகுரு கடையில் நல்ல... முறுக்கு இருக்கு ஒரு ஆளு ஓடிப்போயி வாங்கிக் கிட்டு வா பார்ப்போம்…” கிருசாந்தன் பாய்ந்து போனான்.

“நான்.. வரும் மட்டும் கதைய சொல்லிப்புடாதீங்க…” படிகளில் இறங்கியபடியே கத்தினான். கொஞ்ச நேரத்தில் பறந்து வந்தான். மூச்சு வாங்கியது. தாத்தா ஆளுக்கு இரண்டு முறுக்கு வீதம் கொடுத்தார்.

“கதைய சொல்லுங்க தாத்தா.. கதை கேட்டு ரெண்டு கெழமையாகுது” ஒரு சம்பவத்தை கதையாக்கி சொல்வதில் மாணிக்கம் தாத்தாவின் ஆற்றல் தனித்துவமானது. பகிடி, கோபம், வேதனை, காதல் என சகல இரசனைகளும் வெளிப்படும் கதை கேட்பவரின் வயது, விரும்பும் விடயம், சம்பவம் போன்றவற்றை கருத்தில் கொண்டு கதை சொல்லுவார். வயதானவர்கள் கூட தாத்தாவின் கதைகளைக் கேட்டு கண்ணீர் விட்டதுண்டு.

“நம்ம கிரவுண்டு கதைய சொல்லுறேன் கேளுங்க. வெள்ளக்காரன் காலத்துல வெளயாடுறதுக் கெல்லாம் வசதிகள் இல்லடா பேரன்டிகளா.. இருட்டோட பெரட்டுக்களத்தக்குப் போகனும். இருட்டுப்பட்டு தான் வேல விட்டு வரனும்…” என தொடங்கி ஆரம்ப கால கஸ்டங்களை வேதனையோடு வெளிப்படுத்தினார் மாணிக்கம். “லாம்பெண்ணெய் கூட வாங்க சல்லி இல்லாமல்... ஸ்தோப்புல இருந்த அடுப்புல காய்ந்த வெறக... எரிச்சி அந்த வெளிச்சத்துல இருக்குறத சாப்பிட்டு விட்டு கம்பளிய உதறி போட்டு சுருண்டு படுத்து காலையில் இருட்டோடு எழுந்து வேலைக்கு போகும் கதையை பல முறை சொல்லி இருந்தாலும் இந்த முறை சொன்ன விதம் கவலையையும் கோபத்தையும் ஏற்படுத்தி இருந்தது. சில இடங்களில் தாத்தா பெருமூச்சு விட தாங்களும் பெருமூச்சு விட்டார்கள்.

“என்னா தாத்தா பெரிய அநியாயமா இருக்கு. அத கேட்கிறதுக்கு யாருமே இருக்கலையா?”

“யாரு கேட்பா.... எல்லாம் பெரிய கங்காணி ராச்சியம். வாய தொறக்கவே முடியாது. சங்கம் ஆரம்பிக்கப் போயி அடி வாங்குனது. தோட்டத்த விட்டு ராவோட ராவா ஓடுனது. ரகசியமா பேசி தொழிற் சங்கம் அமைத்தது இப்புடி நெறைய கதைகள் இருக்கு இன்னக்கி இந்த கிரவுண்டோட கதைய சொல்லுறேன் கேளுங்க” என்று தொடர்ந்தார் தாத்தா.

“வெள்ளக்காரன் போன பெறகு, இந்த கறுப்புத் தொரமாருக வந்தானுங்க.. தோட்டத்துக்கு எந்த வசதியும் செஞ்சி குடுக்க மாட்டானுங்க.... இப்ப பார்க்கிறீங்க தானே... இந்த இனவாத தொர என்னா ஆட்டம் ஆடுறானு…”

“அது சரிய தாத்தா ஒரு கேள்வி கேட்கனும் நம்ம சவேரியார் மாமாவுட்டு மகன் நல்லா படிச்சி இருக்குறாரு. அவருக்கு எல்லாம் தொர வேல குடுக்க மாட்டாங்களா தாத்தா…” ரஞ்சன் கேட்டான்.

தாத்தா கல கலவென சிரித்தார்.

“தொழிலாளிகவுட்டு புள்ள நல்லா படிச்சி பத்து பட்டம் வாங்குனாலும் இங்கிலீசு பேசினாலும் கடைசி மட்டும் தொரயா வர முடியாது.. பேராண்டி.. அத உடு.. கதய கேளு”

“எங்க அப்பா கந்தப்பளையில் இருக்குற... பார்க் தோட்டத்துல கலியாணம் முடிச்சவரு... அங்க போய்.. பொடியன்களோட சேர்ந்து நல்லா வொலிபோல் வெளயாட படிச்சிக்கிட்டாரு. எங்க லயத்துல முன்னுக்கு ரெண்டு கம்ப ஊண்டி... சலவலைட்” பந்த வாங்கி பல பேருக்கு வெளயாட்ட பழகி குடுத்தாரு.. எங்க சித்தப்பாமாரு அஞ்சி பேரு, உயிர குடுத்து வெளயாடுவாங்க....”

“அவுங்க எல்லாம் எங்க தாத்தா…” கிருசாந்தன் கேட்டான்.

“அவுங்கள எல்லாம் தான் இந்தியாவுக்கு அனுப்பிப்புட்டா னுங்களே... நாசமா போனவனுங்க.. தாய் நாடுன்னு நம்பி.. போயிட்டு அந்த நாய் நாட்டுலேயே செத்து போனாங்க.... அது பெரிய கண்ணீர் கத... இன்ன ஒரு நாளைக்கு வெவரமா சொல்லுறேன்…” தாத்தாவுக்கு கண்கள் கலங்கின.

“தாத்தா கத சொல்லும் போது சும்மா நொய்யி நொய்யிங்காம சும்மா... இருடா…” கதையில் மூழ்கிய பிரசாத் கோபபட்டான்.

**தொடரும்...**

# சவாலுக்குட்படுமா 2023ஆம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தம்

க.பேர்ணாட்

இலங்கை சுதேச கல்விமுறைமையை ஆரம்பித்தபின் இதுவரை பல கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியிருக்கின்றன. ஆவற்றில் பல சீர்திருத்தங்கள் பல்வேறு காரணங்களால் எதிர்பார்த்த இலக்குகளை அடையமுடியவில்லை. குாலமாற்றம், அரசியல் மாற்றம், விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றம், சமூக எதிர்பார்க்கைகளில் ஏற்பட்ட மாற்றம், மாணவர்களின் எதிர்பார்க்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அவற்றில் முக்கியமானவையாகும். இவற்றைவிட புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வந்தபோது அவைபற்றி எழுந்த விமர்சனங்களும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட பலவீனங்களும் சவால்களும் இன்னொருபக்கமாகக் காணப்பட்ட காரணங்களாகும். 2023ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தமும் இலங்கையின் தற்போதைய நிலமையில் சவாலுக்குட்படுத்தப்படுமா?

இலங்கையில் தற்போது எழுந்துள்ள அரசியல், பொருளாதார, சர்வதேச தொடர்புகளுடனாக உறவு நிலைகள் இன்னும் சில மாதங்களுடன் இருக்கும் புதிய கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்துவதில் தடைகளையும் சவால்களையும் ஏற்படுத்துமா? என்பது பற்றியும் சிந்திக்கவேண்டியுள்ளது.

ஒரு புதிய மாற்றம் கொண்டுவரப்பட்டு நடைமுறைக்கிடுவதற்கு முன் அவை பற்றிய விளக்கமளித்தல், பரீச்சயப்படுத்தல், பரீட்சித்துப் பார்த்தல் போன்ற பல நடைமுறைகளை முன்னேற்பாடாக செய்யவேண்டியுள்ளது. இவற்றைச் சரிவர முன்னே செய்யமுடியாதபோது பல சவால்களையும் தோல்விகளையும் எதிர்நோக்கவேண்டியிருக்கும். ஊதாரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளின் அனுபவத்துடன் இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையிலிருக்கும் வகுப்பறைமட்ட (ஊடீயு), பாடசாலைமட்ட (ளுடீயு) கணிப்பீடுகள் பல ஆண்டுகளாகியும் இன்றுவரை அதன் இறுதி இலக்குகளில் ஒன்றான தேசியமட்ட இறுதி மதிப்பீட்டுடன் இன்னும் சேர்க்கப்படவில்லை. இது விரிவாக ஆராயவேண்டிய விடயம்.

எஞ்சியிருக்கும் இன்னும் சில மாதங்களில் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான பல பணிகள் குறிப்பாக பொதுக்கல்வி முறை தொடர்பான பணிகள் எஞ்சியிருக்கின்றன. புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய விளக்கமளித்தல், பரீச்சயப்படுத்தல், பயிற்சியளித்தல், கலைத்திட்டம் தயாரித்தல், இதவடிவங்கள் (ஆழனரடள), தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்துதல், பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், முன்பள்ளிகள், தொழில்நுட்பக் கல்விக்கான நிறுவனங்கள் போன்றவற்றை வளப்படுத்துதல் போன்றன பலவும் விரிந்து காணப்படுகின்றன.

தற்போதுள்ள அரசியல், பொருளாதார, சமூக சூழ்நிலைகளில் இருக்கக் கூடிய குறுகிய கால கிடைப்பனவு இச் செயற்பாடுகளுக்கு போதுமானதா? இடமளிக்குமா? இன்னும் சில ஆண்டுகள் தேவைப்படுமா? என்பனபற்றி சிந்திக்கவேண்டியுள்ளது. இவை 2023ஆம் ஆண்டுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் சவாலுக்குட்படுத்தப்படுமா? என சிந்திக்கத் தூண்டுகின்றது.

ஒப்பீட்டு நோக்கின் சர்வதேச ரீதியான கல்விப் போக்குடனும் காலத்திற்குப் பொருத்தமாகவும் தொழில் உலகிற்கு ஏற்றவாறாகவும் கல்வி வாய்ப்புக்களை பரவலாக்குவது தொடர்பாகவும் இன்னும் பல சாதகமான விளைவுகளைக் கொண்டிருக்கும் புதிய கல்விச் சீர்திருத்தம் எதிர்நோக்கக் கூடிய சவால்கள், நடைகள் பற்றியும் பல வழிகளிலும் சிந்தித்துப்பார்ப்பது அவசியமானதாகும். இவ்வினா பரந்ததும் ஆளமானதுமான விடயமாயினும் கல்வியியலாளர்களின் சிந்தனைக்காக ஆய்வுக்காக சீர்தூக்கலுக்கும் ஆலோசனைக்குமாக தரப்படுகின்றது.

# இலங்கை ஒரு விவசாய நாடு...!

ம.நிரேஸ்குமார்

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்பட்ட இலங்கைத் தீவானது சுய பொருளாதாரத்தில் திருப்தியான நிலையில் மிகச் சிறந்த விவசாய நாடாக பல தசாப்தங்களாக மிளிர்ந்து வந்துள்ளது. இலங்கைத் தீவின் எழில் கொஞ்சும் அழகும், குவிந்திருந்த இயற்கை வளங்களும் பல வெளிநாட்டவர்களை இலங்கை மீது காதல் கொள்ளச் செய்ததில் வியப்பேதும் இல்லை. அதன் விளைவாகப் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் பலப் பல வெளிநாட்டவர்கள் இலங்கையை ஆட்சி செய்ததுடன் இலங்கையின் செல்வங்கள் அனைத்தையும் தமது நாடுகளுக்குக் கொள்ளையடித்தும் சென்றுள்ளனர். 1940 களில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் வெள்ளையர்களுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கி, யுத்தம் புரிந்ததன் விளைவாக, பிரித்தானியர்கள் கீழைத்தேச நாடுகளை விட்டு வெளியேற முடிவெடுத்தனர். இதன் பயனாக இலங்கையும் 1947 இல் சுதந்திரம் பெற்றது.

சுதந்திரம் பெற்று ஏறக் குறைய 30 ஆண்டுகள் வரை இலங்கைத் தீவானது செல்வச் செழிப்புடன் விளங்கியது. விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்ட மக்கள் தம்மால் இயன்ற உணவு உற்பத்திகளைச் செய்து, தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி மீதியை ஏனைய மக்களுக்கும் கிடைக்கச் செய்தனர். தேயிலை, இறப்பர், தெங்கு பொருட்களின் உற்பத்தியிலும் இலங்கை சிறந்து விளங்கியது. அத்துடன் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும் அந்நியச் செலாவணிகளை ஈட்டிக் கொண்டது. விவசாய நாடாக சிறந்து விளங்கிய இலங்கையை கைத்தொழில் நாடாக மாற்ற வேண்டும் என்ற முயற்சியில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொருவரும் ஈடுபட்டனர். இதன் விளைவாக இலங்கை கொஞ்சம் கொஞ்சமாகத் தனது சோபையை இழக்கத் தொடங்கியது.

அது மாத்திரம் இல்லாமல் அவ்வப்போது ஆட்சிக்கு வந்த ஆட்சியர்கள் ஒவ்வொருவரும் தமக்கும் தமது பரம்பரைக்கும் தேவையான சொத்துக்கள் அனைத்தையும் தமது ஆட்சிக் காலத்திலேயே சேமிக்க விளைந்ததன் காரணமாக நடுத்தர மற்றும் ஏழை மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கத் தொடங்கினர். இந்நேரத்தில் பெருமளவான இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கு தமது உழைப்புக்குக் கிடைத்த ஊதியத்தை இங்கு அனுப்பி வைத்தனர். இதன் விளைவாகவும் இலங்கை ஓரளவுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டத் தொடங்கியது.

அது மாத்திரம் இல்லாமல், மிகக் குறைந்த செலவில் சுற்றுலா செல்வதற்கு விரும்பிய பல வெளிநாட்டவர்களும், இயற்கை வளம் மிக்க இலங்கையை சுற்றிப் பார்ப்பதற்காக படையெடுக்கத் தொடங்கினர். இதன் விளைவாகவும் இலங்கை கணிசமான வெளிநாட்டு செலாவணியை ஈட்டிக் கொண்டது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளால் இலங்கை ஓரளவுக்கேனும் தன்னிறைவு பெற்ற நாடாக சிறந்து விளங்கியது.
அண்மைக் காலங்களில் இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளம் நோக்கிச் சென்றதற்கு, 2 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கொரோனா நோய்த் தொற்று மாத்திரம் காரணமல்ல என்பது அனைவரும் அறிந்ததே! இலங்கையின் மாண்புமிகு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ அவர்கள் 'இலங்கை ஒரு சுற்றுலா நாடு. கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்ததே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்' என வெளிப்படையாகத் தெரிவித்தும் உள்ளார். அவரது பாட்டனும் பூட்டனும் விவசாயம் செய்து சிறப்புடன் வாழ்ந்த வரலாற்றை ஏனோ அவர் மறந்தும் விட்டார்.

இந்த நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் 24 மணித்தியால மின்சாரம், நீண்ட வரிசைகளில் காத்திருக்காமல் எரிபொருள், அத்தியாவசியப் பொருட்களின் விலைக் குறைப்பு எனக் குறுகிய வட்டத்திற்குள் மாற்றமடைந்துள்ளன. ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமைகளை சுமக்க முடியாமல் மக்கள் வீதிகளுக்கு இறங்கிப் போராடவும் தொடங்கியுள்ளனர். நாம் போராட்டங்களைக் கொச்சைப் படுத்தும் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல! போராடிப் பெற வேண்டிய விடயங்களைப் போராடியே பெற வேண்டும் என வலுவாக நம்பியவர்கள் நாம்...! எனவே போராட்டங்களை விமர்சிக்காமல் சில மாற்றுச் சிந்தனைகளை முன் வைக்கவே விரும்புகின்றோம்.

இலங்கை ஒரு விவசாய நாடு! இதனை ஒரு தாரக மந்திரமாகக் கொண்டு நாம் செயற்படத் தொடங்க வேண்டும். மக்கள் ஒவ்வொருவரும் சுய பொருளாதார விருத்திக்காக உழைக்கத் தொடங்க வேண்டும். எம்மால் முடிந்த பயிர்களைப் பயிர் செய்தும் தாவரங்களை நாட்டியும் விவசாயத்தைப் பெருக்க வேண்டும். கால் நடைகளை வளர்க்கத் தொடங்க வேண்டும். தேவையற்ற செலவினங்களைக் குறைத்து சிக்கனமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.
இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும், எந்த விதமான பாகுபாடுமில்லாமல், சுய பொருளாதார விருத்தியில் ஈடுபடத் தொடங்கினால்... குறிப்பிட்ட காலத்திற்குள் இப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு... மீண்டும் இந்து சமுத்திரத்தின் முத்தாக இலங்கையை ஜொலிக்கச் செய்ய முடியும்.

# சோசலிஷம் எதற்காக? (ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்)

1

## தமிழாக்கம்: சிவலிங்கம் மு.

பொருளாதார, சமூகப் பிரச்சினைகளில் வல்லுனராக இல்லாத ஒருவர் சோசலிஷம் என்ற பொருள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பது சரியானதா? பற்பல காரணங்களினால் சரியானது என்றே நான் நம்புகிறேன்.

விஞ்ஞான அறிவுக் கண்ணோட்டத்திலிருந்து முதலில் இந்தப் பிரச்சினையை நோக்குவோம். வானியலுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையில் சாராம்சமான நடைமுறை ரீதியான வேறுபாடுகள் எதுவும் இல்லை என்பதுபோலத் தோன்றலாம்: இரு துறைகளையும் சார்ந்த விஞ்ஞானிகள் ஒரு வரம்புக்குட்பட்ட தொகுப்பில் அடங்கிய நிகழ்வுகளுக்கு இடையேயான பரஸ்பரத் தொடர்பினைக் கூடுமானவரைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு, அந்த நிகழ்வுகளின் தொகுதிக்குப் பொதுவாக ஏற்றுக் கொள்ளத் தக்க விதிகளைக் கண்டறிய முயல்கிறார்கள். ஆனால் எதார்த்தத்தில் அத்தகைய நடைமுறை ரீதியான வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன.

பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டால், பொருளாதார நிகழ்வுகள் பெரும்பாலும் அனேகக் காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. அக்காரணிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே மதிப்பீடு செய்வது மிகவும் கடினம் ஆகும்.

இத்தகைய சூழ்நிலை, பொருளாதாரத் துறையில் செயல்படும் பொதுவான விதிகளைக் கண்டறியும் பணியைச் சிக்கலாக்கியுள்ளது. அதோடுகூட, மனித வரலாற்றில், நன்கு அறியப்பட்ட நாகரிகக் காலப்பகுதி என்று சொல்லப்படுகின்ற காலந்தொட்டு இன்றுவரை நாம் சேர்த்து வைத்துள்ள அனுபவத்தின்மீது பெருமளவு செல்வாக்குச் செலுத்திய, கட்டுப்படுத்திய காரணிகள் முற்றாகப் பொருளாதார இயல்பு கொண்டவையே அன்றி வேறல்ல.

எடுத்துக்காட்டாக, வரலாற்றில் இடம்பெற்றுள்ள பெரும் பேரரசுகளில் பெரும்பாலானவை போர் வெற்றிகளாலேயே நிலைபெற்றுள்ளன. வெற்றி பெற்ற மக்கள், வெற்றி கொள்ளப்பட்ட நாட்டின் சிறப்புரிமை பெற்ற வர்க்கமாக சட்ட ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர். அந்நாட்டு நிலங்களின் மீதான ஏகபோக உரிமையை தமக்கென அபகரித்துக் கொண்டனர்.

தங்களுடைய ஆட்களையே அந்நாட்டில் மதக் குருக்களாய் நியமித்தனர். அம்மதக் குருக்கள் கல்வியைத் தங்கள்

கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, சமுதாயத்தில் நிலவிய வர்க்கப் பிரிவினைகளை நிரந்தர சமூக அமைப்புகளாக மாற்றிவிட்டனர்.

அந்நாட்டு மக்கள் தமது சமுதாய நடவடிக்கைகளில் பின்பற்றக்கூடிய சமூக மதிப்புகளின் கட்டமைப்பை உருவாக்கினர். மக்கள் பெரும்பாலும் தங்களை அறியாமலேயே அதன்படி வழிநடத்தப்பட்டனர். ஆனால், தார்ஸ்டெயின் வெப்லென் (Thorstein Veblen) அவர்கள், மனிதகுல வளர்ச்சியில் "கொள்ளைசார்ந்த காலகட்டம்" (predatory phase) என்று அழைக்கிற நேற்றைய வரலாற்று மரபை நாம் எங்கேயும் உண்மையிலேயே விட்டொழித்ததாகத் தெரியவில்லை.

அந்தக் காலகட்டத்துக்குரிய அறியக்கூடிய பொருளாதார உண்மைகள் மற்றும் அவற்றிலிருந்து நாம் தருவிக்க முடிகிற விதிகளும்கூட வரலாற்றின் பிற காலகட்டங்களுக்குப் பொருந்தாதவை ஆகும். சோசலிஷத்தின் உண்மையான நோக்கம், துல்லியமாக, மனிதகுல வளர்ச்சியின் கொள்ளைசார்ந்த காலகட்டத்திலிருந்து விடுபடுவதும், அதனையும் தாண்டி முன்னேறுவதுமே ஆகும். பொருளாதார விஞ்ஞானம் இப்போதிருக்கும் நிலையில் வருங்கால சோசலி' சமுதாயம் பற்றி எதுவும் கூற இயலாத நிலைமையே உள்ளது.

இரண்டாவதாக, சோசலி'மானது ஒரு சமூக-அறநெறி முடிவை நோக்கி (வழறயசனள ளழஉயைட-நவாைஉயட நனெ) நெறிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், விஞ்ஞானத்தால் முடிவுகளை உருவாக்க முடியாது. மேலும் முடிவுகளை மனிதர்களுக்குள் புகட்ட அதைவிடவும் முடியாது. விஞ்ஞானம், அதிகப் பட்சமாக, சில முடிவுகளை எட்டுவதற்கான சாதனங்களை வழங்க முடியும். ஆனால் இத்தகைய முடிவுகள் தம்மளவில், உன்னத அறநெறி இலட்சியங்களைக் கொண்டுள்ள தலைவர்களின் சிந்தனையில் உருவானவையே ஆகும். சாராம்சமான, உந்துசக்தி மிக்க இந்தக் கருத்துகள் எண்ணத்திலிருந்து வெளிப்பட்டவுடனே, சமுதாயத்தின் மெதுவான பரிணாம வளர்ச்சியைத் தீர்மானிக்கின்ற மக்கள் திரள் அக்கருத்துகளை ஏற்றுக் கொண்டு, முன்னெடுத்துச் செல்கின்றனர். அவர்களில் பாதிப்பேர் தங்களை அறியாமலேயே இதில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் காரணங்களினால், மானுடப் பிரச்சினைகள் என்று வரும்போது, விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞான வழிமுறைகளைப் பற்றி அதிகமாக எடைபோட்டுவிடாமல் கவனமாக இருக்க வேண்டும். சமுதாய அமைப்பினைப் பாதிக்கின்ற பிரச்சினைகளின் மீது வல்லுநர்கள் மட்டுமே கருத்துக் கூறும் உரிமை பெற்றவர்கள் என நாம் கருதிவிடக் கூடாது.

**தொடரும்...**

## தமிழ் மீது காதல் கொள்வோம்

வேங்கடல் குமரியென
விரிந்த நிலத்தினில்
வேந்தன் வேற்படை கட்ட
வளர்ந்த என் தமிழே!!

முத்தமிழ் மோகத்தில்
முட்டி மோதுகின்றேன்
முப்பால் தந்து
முத்தமும் தந்தாய்..

நாவினில் விந்தை செய்ய
மெல் வல் இடை என
விரும்பியே காதல் செய்தேன்
வித்தகி உனையே..

போதிமரம் கீழிருந்து
புத்தநிலை தான் அடைந்தும்
தீருமோ தாகம்
தமிழ் மீது யான் கொண்ட மோகம்..

கலையினில் கற்பம் தரிக்க
தமிழினை காதல் செய்தேன்
தமிழினில் ஊடல் செய்தேன்
தமிழிலும் கலவி செய்தேன்..

தாய் சேயிலும் கொண்டதில்லை
தலைவன் துணையிலும் கொண்டதில்லை
பசு தம் கன்றிலும் கொண்டதில்லை
யான் தமிழ் மீது கொண்ட காதல்..

காரினில் குதிக்கும் மழையும் - அட
கவிதைகள் இசைக்கும் மொழியும்
காற்றினில் கலக்கும் மலரும் - அட
தமிழ் தமிழ் என்று வீசும் கண்டீர்...

தமிழை தமிழால் எழுதி
தமிழினை தமிழினால் வாழ்த்தி
தமிழுக்கு தமிழால் மகுடமிட
தமிழினில் எத்தனை வார்த்தை...

அத்தனையும் எனக்காய் என்று - யான்
என் தவம் செய்தேன்
இத்தனை அழகுடன்
காதலில் திளைக்க...

பிறவிப்பயன் ஒன்று
உண்டெண்டு கண்டால்
உயிர் பிரியும் போதும்
நாவில் தமிழ் ஊறும் கண்டீர்...

தமிழ் மீது காதல் கொள்வோம்!!!

- தேவ் -

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து ...

யாழ்ப்பாணம், இலங்கை.

## கண்ணீர் அஞ்சலிகள்



## கல்வியியல் பேராசன்
## அமரர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

தமிழ் பேசும் உலகின் கல்வியியல் பேராசான் ஓய்வுநிலை பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களின் மறைவினால் அதிர்ச்சியுற்றிருக்கும் கல்வி உலகுடன் நாமும் இணைந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குருசேத்திரம் குழுமம்